# பல்கலைக்கழகங்களின் தன்னாட்சிக்கு அச்சுறுத்தல்!

உயர்கல்வி நிறுவனங்கள், குறிப்பாக பல்கலைக்கழகங்கள் முழு சுதந்திரம் கொண்ட தன்னாட்சி (Autonomous) நிறுவனங்களாகும். உலகிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் தோற்றுவிக்கப்பட்ட சாசனத்தில் (Charter) அரசோ அல்லது அதன் ஆளுமைகளோ, பல்கலைக்கழகங்களின் தன்னாட்சிக்கு எந்த வகையிலும் பாதிப்பில்லாமல் காப்பாற்றிக் கொள்வது கட்டாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைப் போலத்தான் இந்தியாவில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட மூன்று பல்கலைக்கழகங்களான, சென்னை, கல்கத்தா மற்றும் மும்பை பல்கலைக்கழகங்களின் நோக்கங்களின் முதன்மையாக, பல்கலைக்கழகங்களின் தன்னாட்சி உரிமையினைக் காப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. The Madras Universities Act 1923, The Senate and Syndicate have the power as per Sec 16 and 19 of the Act, to make Statutes and amend or repeat the same and to modify or cancel Ordinance and Regulations in the manner prescribed by the Act.

இந்திய அரசால் உயர்கல்வியின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் கமிசன் 1948, கோத்தாரி கமிசன் 1964, தேசிய கல்வி கொள்கை 1986, தேசிய கல்விக் கொள்கை 2020, அனைத்தின் முகப்புரையிலும் (Preamble), பல்கலைக்கழகங்களின் தன்னாட்சி உரிமையில் தலையிடுவது, பல்கலைக்கழகங்களின் சட்ட விதிகளுக்கு எதிரானது என்றும், ஜுன் 2020ல் மத்திய மனித மேம்பாட்டு கல்வி அமைச்சகத்தினால் அமைக்கப்பட்டிருந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கான தன்னாட்சி பற்றிய அறிக்கையில் (Report of the Central Advisory Board of Education (CABE) Committee) Automy of Higher Education Institutions is a prerequisite for enabling them to achieve the goals and objectives. An honest exercise of autonomy will lead to making these Institutions as Centres of Innovation, Excellence and Development என்று குறிப்பிட்டுள்ளது.

ஜனவரி 6, 2025 அன்று பல்கலைக்கழக மானியக் குழுவினால் (UGC) வெளியிடப்பட்ட வரையறை சட்டம் 2025, மிகப்பெரிய அச்சுறுத்தலை உயர்கல்வி நிறுவனங்களின் தன்னாட்சிக்கு அளித்துள்ளது. அவற்றில் மிக முக்கியமானவை

1. துணைவேந்தர்கள் தேடுதல் குழு அமைத்தல் (Search Committee)

2. துணைவேந்தர் நியமனத்திற்கான தகுதியில், கல்வியாளர்கள் இல்லாத பொதுத் துறை மற்றும் அரசுத் துறையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்களையும் தேர்வு செய்தல்.

3. பல்கலைக்கழக ஆசிரியர்கள் பணிக்கான அடிப்படைத் தகுதிகள்

4. தேசிய தரமதிப்பீட்டில், தேசிய கல்விக் கொள்கை 2020ன் திட்டங்களை செயல்படுத்துவதற்கென்று மதிப்பெண்கள் அளித்தல்.

5. தேசிய கல்விக் கொள்கை 2020ன் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்தத் தவறிய பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்தல்

**பல்கலைக்கழகங்களின் சட்டங்களை (Statutes) விதி மீறல்:**

மத்திய பல்கலைக்கழகங்கள், நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்றும், மாநில பல்கலைக்கழகங்கள் சட்டமன்றங்களின் ஒப்புதல் பெற்றும், அதற்கான சட்டங்களை (Statute) உருவாக்கி அமைக்கப்படுகின்றன. இப்படியான சட்டங்கள் அரசியலமைப்புச்சட்டம் (Constitution of India) போல் பாதுகாக்கப்பட வேண்டியது. அதனில் மாற்றங்களை நாடாளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ மட்டும்தான் கொண்டு வர முடியும். பல்கலைக்கழகங்கள், தங்களின் சட்டவிதிமுறைகளுக்கு?மட்டுமே கட்டுப்பட்டது. மேலே சொல்லப்பட்ட ஐந்து சட்ட வரைமுறைகள் 2025, அமுல்படுத்தி செயல்படுத்த வேண்டுமானால், அவை, அந்தந்த பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழு (Senate), ஆட்சிக்குழுவில் (Syndicate) சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறவேண்டும். அப்படியான சட்டத் திருத்தங்கள், மாநில ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தரின் ஒப்புதல் பெற்ற பிறகு செயல்படுத்த முடியும். இல்லையேல், ஒருசாரர், பல்கலைக்கழகத்தின் சட்டத்தினை (Statute) மேற்கோள் காட்டி, விதி மீறல்கள் என்று நீதிமன்றங்கள் செல்வர். இதன் விளைவாக, தமிழ்நாட்டிலுள்ள மாநில பல்கலைக்கழகங்களுக்கு இன்னும் இருபது ஆண்டுகள் ஆனாலும் சட்டப்படியான துணைவேந்தர் நியமனம் நடைபெறுவதற்கான வாய்ப்பே இல்லை. எத்தனை வருடங்கள்தான் துணைவேந்தர்கள் குழு (Convenor's Committee) பல்கலைக்கழக நிர்வாகங்களை மேற்கொள்ள முடியும். மொத்தத்தில் பல இலட்சம் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் உயர்கல்வியின் கனவுகள் அழிக்கப்பட்டுவிடும்.

**துணைவேந்தர் நியமன தேடுதல் குழு**

எப்படியான முறையில் தேடுதல் குழு அமைத்தாலும், அந்தக்குழு பரிந்துரைக்கின்ற மூன்று பேரில் ஒருவரை தேர்வு செய்கின்ற அதிகாரம் பல்கலைக்கழக வேந்தருக்கு, பல்கலைக்கழகச் சட்டங்கள் அளித்துள்ளன. அந்த மூன்று பேரைப் பரிந்துரைக்கின்ற தேடுதல் குழுவில் வேந்தரால் நியமிக்கப்பட்ட ஒருவர் தலைவராகவும், ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிமன்றக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட இருவர் உறுப்பினர்களாக இருப்பர். சில பல்கலைக்கழக விதிப்படி தேடுதல் குழுவில் ஆளுநரால் நியமிக்கப்படா மல், மாநில அரசால் நியமிக்கப்படுபவர் ஆட்சிமன்றக் குழு, ஆட்சிக்குழுவால் தேர்வு செய்பவர்கள் உறுப்பினர்களாகவும், தலைவராகவும் இருக்கின்றனர். இப்படியான பல்கலைக்கழகங்களுக்கான மூன்று பேரின் பரிந்துரையுமே மாநில அரசின் விருப்பமானால், தன்னுடைய இறுதித்தேர்வில் தான் விரும்புகின்ற ஒருவரை நியமிக்க எந்த வாய்ப்பும் இல்லையே என்பதுதான் ஆளுநரின் வேதனைக்கும் எதிர்ப்பிற்கும் காரணம் என்று சந்தேகப்படுகின்றது மாநில அரசு.

அத்தோடு, கொண்டு வரப்பட்டுள்ள UGC Regulation 2025ன் படி, அனைத்துப் பல்கலைக்கழக துணைவேந்தர் தேடுதல் குழுவின் தலைவர் ஆளுநர், பல்கலைக்கழக மானியக்குழு பிரதிநிதி மற்றும் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு அல்லது ஆட்சிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுபவர் உறுப்பினர். இதில் பல்கலைக்கழகங்கள் உருவாக சட்டம் இயற்றி, நிலம் அளித்து கட்டிடங்கள் உருவாக்கி, நியமனங்கள் மேற்கொண்டு, அவர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம், பராமரிப்பு என்று பலகோடி ரூபாய் நிதிகளை செலவிட்டு வருகின்ற மாநில அரசிற்கு, துணைவேந்தர் நியமனத்தில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று ஜனவரி 9, 2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் யு.ஜி.சி.யின் வரைவு சட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.



**முனைவர் க.திருவாசகம்**
முன்னாள் துணைவேந்தர் :
பாரதியார் பல்கலைக்கழகம்,
மற்றும் சென்னை பல்கலைக்கழகம்,
அமெட் பல்கலைக்கழகம்,
சென்னை

மாநில அரசோ, ஆளுநர் மற்றும் வேந்தரோ மத்திய கல்வி அமைச்சகமோ அல்லது பல்கலைக்கழக மானியக்குழுவோ, யார் எப்படி சட்டங்கள் கொண்டு வந்தாலும் அவைகள் அந்தந்த பல்கலைக்கழகங்களின் ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிமன்றக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற்று, பல்கலைக்கழகச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரவில்லையென்றால், எப்படியான மாற்றங்களையும் கொண்டு வரமுடியாது.

**துணைவேந்தர் நியமனத்திற்கான தகுதிகள்!**

தற்போதுள்ளபடி குறைந்தது பத்து ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவம், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அனுபவம் தேர்விற்கான தகுதியாகும். பல ஆண்டுகள் ஆராய்ச்சியாளர்களாக (Research Scholars) பலரை முதுநிலை பட்டம் பெற (Research Guide) வழிகாட்டியாக, ஆராய்ச்சி கட்டுரைகளை அளித்தவராக, உள்நாட்டிலும் வெளிநாட்டு ஆராய்ச்சி கருத்தரங்குகளில் கட்டுரைகளை சமர்ப்பித்தவர்கள் கல்வி நிறுவனங்களில் பல நிர்வாகப் பொறுப்பிலிருந்து அனுபவம் கொண்டவர்கள் தேர்வு செய்யப்பட்டு, இப்போது உலக அளவு மற்றும் தேசிய அளவிலான தரவரிசையில், அதிக எண்ணிக்கை கொண்ட பல்கலைக்கழகங்களாக இந்தியாவிலிருக்கிறது. இதற்கான மிக முக்கியமான காரணம் கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் துணைவேந்தர்களாகத் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி வந்தனர் வருகின்றனர். இத்தறுவாயில், கல்வியாளர்களல்லாத, தனியார் மற்றும் பொது நிறுவனங்களில் பணியாற்றும் / பணியாற்றியவர்களும் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் அரசுகளின் தலைமைச் செயலகங்கள் அல்ல. பொதுநிறுவனங்களின் Corporate Office அல்ல... பல்கலைக்கழகங்களின் மூல காரணிகளாகக் கருதப்படுகின்ற பாடத்திட்டங்கள், தேர்வுமுறைகள், வகுப்பறைப் பாடங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் என்று பல பத்து ஆண்டுகள் பணியாற்றியவர்களால் மட்டுமே, உயர்கல்வி நிறுவனங்களை உலகளாவிய அளவில் மேம்படுத்த முடியும். இப்படியான எந்த அனுபவமும் இல்லாத IAS / IPS / CEO / MD ஆகியவர்களால் எந்த அளவிற்கு உயர்கல்வி நிறுவனங்களுக்கு தலைமையேற்க முடியும்.

**ஆசிரியர் நியமனத் தகுதி:**

உயர்கல்வி நிறுவனங்களில் ஆசிரியராகத் தேர்வு பெற, முதுகலைப் பட்டம் மற்றும் NET or SET அல்லது முனைவர் பட்டம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலில் முனைவர் பட்டம் தேவையில்லை என்று சொல்லப்பட்டது. தற்போது NET / SET தேவையில்லை. இளங்கலை பட்டத்தில் 75 சதவிகித மதிப்பெண் மற்றும் முனைவர் பட்டம் இருந்தால் போதுமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் முதுநிலைப்படிப்பிற்கு மாணவர்கள் போவதே ஆசிரியர் பணிக்குச் செல்லவும் மற்றும் ஆராய்ச்சி படிப்பிற்கு (Ph.D) செல்வதற்கான காரணத்திற்காகத்தான். முதுகலைப் படிப்புத் தருவாயில், அவர்தம் பாடங்களில், ஆராய்ச்சியில், மேன்மையான பயிற்சியும், அனுபவமும் பெறுகின்றனர். அத்தோடு Teaching Methodologyயும் கற்றுக் கொள்கின்றனர். இந்த அனுபவம் அவர்களுக்குத் திறமையான ஆசிரியர்களாக பணியாற்ற உதவுகின்றது. இத்தருவாயில் இளங்கலைப் படிப்பு முடித்து, ஆராய்ச்சிப் பட்டம் பெற்றாலும், ஆசிரியராகலாம் என்பது எந்த அளவிற்கு திறமையும், அனுபவம் உள்ளவர்கள் ஆசிரியர்களாகச் சிறப்பாக பணியாற்ற முடியும் என்பது கேள்விக்குறி.

**தேசிய கல்விக் கொள்கையும் தரச்சான்றும்**

தேசிய அளவில், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், National Assessment and Accreditation Council (NAAC) மூலம் தரச்சான்றுகள் பெறுகின்றன. அளிக்கப்படுகின்ற தரச்சான்றின் (Grade) கல்வி நிறுவனங்களுக்கு பலவிதமான சலுகைகளை மத்திய கல்வி அமைச்சகம் அளித்து வருகின்றது. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய 5 மாநிலங்கள் தேசிய கல்விக்கொள்கை 2020ஐ ஏற்றுக் கொள்ளவில்லை. அம்மாநிலங்களின் பல்கலைக்கழகங்கள், NEP 2020ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்தவும் இல்லை. தற்போது NEP 2020ன் திட்ட ங்களை, மாநிலங்களின் எதிர்ப்பிற்கு அப்பாற்பட்டு, 1170 பல்கலைக்கழகங்கள் 47000 கல்லூரிகளில் அமுல்படுத்தி செயல்படுத்துவதை கட்டாயமாக்கி வருகின்றது.

விரைவில் வரவிருக்கின்ற நாட்களில் தரமதிப்பிற்கான மதிப்பெண்களில், ஏறத்தாழ 25%, NEP 2020 திட்டங்களை அமுல்படுத்தி செயல்படுத்தினால் மட்டுமே அளிக்கப்படும் என்று நிர்மாணம் செய்யவிருக்கின்றது NAAC. இதன் வெளிப்பாடாக, தேசிய கல்விக் கொள்கை 2020னை ஏற்றுக் கொள்ளாத தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், கர்நாடகா, தெலுங்கானா ஆகிய ஐந்து மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் தரமதிப்பீட்டில் மிகப் பெரிய பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும்.

அத்தோடு, ஜனவரி 3, 2025 தேதியிட்ட பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவிப்பின்படி, NEP 2020ன் திட்டங்களை செயல்படுத்தும் கல்வி நிறுவனங்களுக்கென்று பிரத்தியேக தரவரிசையும், Category Status அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் தகுதியான NEP 2020 திட்டங்களை செயலாற்றுவதுதான். ஆகையால், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மேற்கு வங்கம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் கல்வி நிறுவனங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும்.

**அச்சுறுத்தலை ஆளுநர்தான் தவிர்க்க வேண்டும்:**

பல்கலைக்கழகங்களின் வேந்தரின் முதல் கடமையே, பல்கலைக்கழகங்களின் சட்டங்களை (Statutes) கடைபிடிப்பதை உறுதி செய்வதாகும். மத்திய அரசு மற்றும் யு.ஜி.சி. என்ற பெயரில், சட்டங்களுக்கு எந்த வித பங்கமும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். மக்களின் முடிவுதான் மாநில சட்டமன்றத்தின் முடிவு என்பதற்கு மதிப்பளித்து, பல்கலைக்கழகங்கள் தொடர்பான, தமிழ்நாடு சட்டமன்றத்தின் தீர்மானங்களுக்கு ஒப்புதல்களை வழங்கியும் சட்டமாக்கியும் பல்கலைக்கழகங்களுக்கான அச்சுறுத்தல்களைப் போக்கி, தன்னாட்சி கொண்ட உயர்கல்வி நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள் விளங்கச் செய்வது மேதகு ஆளுநரின் மிக முக்கியப் பொறுப்பாகும்.

---

### இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்ட

# டாக்டர் கே.எம்.செரியன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன.28**

**இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்ட டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

ஃப்ராண்டியர் லைஃப்லைன் மருத்துவமனையின் தலைவரும், இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்டவருமான டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

இதய சிகிச்சையில் அவரது முன்னோடியான பணிகள், எண்ணற்றோரின் உயிரைக் காப்பாற்றியுள்ளதுடன், மருத்துவத்துறையில் பலருக்கும் ஊக்கமாக அமைந்துள்ளது.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தார்க்கும் அவரது அன்புக்குரியார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பங்களிப்புகள் மருத்துவத்துறையில் சிறப்பான பணிகளுக்குத் தொடர்ந்து தூண்டுகோலாக அமையும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### இன்று (ஜன. 28) நடைபெறுகிறது!

# நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (28.1.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் - 'மாதா மாளிகை'யில் மாவட்டக்கழக அவைத்தலைவர்கள் தலைமையில் நடை பெறுகிறது.

மாவட்டச் செயாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் - நெல்லை மாவட்டக் கழகங் களின் நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் மற்றும் பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : பிப். 6, 7 ஆகிய நாட்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்துக்கு வருகை!**

**மற்றும் - கழக ஆக்கப் பணிகள்.**

அமைச்சர் **கே.என்.நேரு**
**தலைமைக் கழக முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**

---

### மதுரை தெற்கு மாவட்டம் – அவனியாபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர்

# வழக்கறிஞர் மணிசேகரன் மறைவு!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் – கழகத்தினர் இரங்கல்!

*மதுரை, ஜன. 28 -*

மதுரை தெற்கு மாவட்டம் அவனியாபுரம் கிழக்கு பகுதி கழக செயலாளரும், வழக்கறிஞருமான மணிசேகரன் வயது (54) மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தியறிந்து மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் நேரில் அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்தார்.

மதுரை தெற்கு மாவட்டம் அவனியாபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளராக சிறப்பாக பணியாற்றி வந்த வழக்கறிஞர் மணிசேகரன் மாரடைப்பால் இயற்கை எய்தினார். இவர் தலைமை கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறப்பாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவு அப்பகுதி மக்கள் மத்தியிலும், கழகத்தினர் மத்தியிலும் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவருக்கு வனிதா என்ற மனைவியும் ஜெகன் மற்றும் மெல்லினா, இனிஷா, ஆஷா என்ற மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு துயரச் செய்தி அறிந்த தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர். மேலும் அப்பகுதி பொது மக்களும், வியாபாரிகளும், வழக்கறிஞர்களும் மணிசேகரனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்து வருகிறார்கள்.

---

# மும்பை புறநகர் தி.மு.க. சார்பாக வீரவணக்க நாள் நிகழ்ச்சிகள்!

## அலிஷேக் மீரான் சிறப்புரை!

*மும்பை, ஜன. 28 -*

தாய்மொழி தமிழுக்காக தன்னுயிர் ஈந்த தியாகிகளை கௌரவிக்கும் விதமாக வீரவணக்க நாள் ஜனவரி 25 அன்று அனுசரிக்கப்பட்டது. மும்பை புறநகர் தி.மு.க. ஆரெகாலனி கிளை சார்பாக வீரவணக்க நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிவக்குமார், தலைமை வகித்தார். மும்பை புறநகர் தி.மு.க. அமைப்பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரை ஆற்றினார்.

அவைத்தலைவர் தலைவர் ஜேம்ஸ் தேவதாசன் மற்றும் பலர் தியாகிகள் திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பாண்டு ச.சி.தாசன் , ஆரே காலனி பாண்டு, முன்னாள் செயலாலர் கு. தர்மலிங்கம் , முகமது அலி ஜின்னா சேகர் சுப்பையா, கோவிந்தராஜ், சதாசிவம்.தர்நீஷ், பன்னீர் செல்வம்ஆறுமுகம்மற்றும் இளைஞர் அணி,மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

பிவண்டி பகுதியில் நடைபெற்ற வீரவணக்க நாள் கூட்டம் கிளை செயலாளர் மெஹபூப் பாச்சா தலைமையில் நடந்தது இளைஞர் அணி அமைப்பாளர் வசந்தகுமார் ,முஸ்டாக் பாய், ஜெயினுல் ஆப்தீன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கல்யாண் பகுதியில் துணைச் செயலாளர் வதிலை பிரதாபன் தலைமையில் நடைபெற்றது அதில் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சதானந்தம் ,வீரைபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

குர்லா ஜெரிமெரி பகுதியில் துணைச் செயலாளர் இளங்கோ தலைமையில் நடைபெற்றது ஜோகேஸ்வரி பகுதியில் ஆர். ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

கோரேகான் பகுதியில் சோ.பா. குமரேசன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்து நிகழ்ச்சி களிலும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு மொழிப்போர்த் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.